கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

எதிரி தரப்பு 1 வது சாட்சி (எ.த.சா.1)

CC No.86/2023

| | | |
|---|---|---|
| பெயர் | – | சுரேஷ் |
| த/பெ | – | சமுத்திரம் |
| கிராமம் | – | |
| தாலுகா | – | |
| தொழில் | – | |
| வயது | – | 43 |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் நாள் வெள்ளிக்கிழமை மேற்படியாரிடமிருந்து சத்திய பிரமாணத்தின் பெயரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் வள்ளியூர் கிளை TMB வங்கியில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

15.11.2021 ம் தேதியிட்ட காசோலை எண்.015688 எங்களுடைய வங்கிக்கு வசூலுக்காக இரண்டு முறை வந்தது. பொதுவாக எப்பொழுதும் எங்கள் வங்கிக்கு வரும் காசோலையில் உள்ள கையொப்பத்தை வங்கியில் பராமரிக்கப்படும் Speciman Signature உடன் ஒப்பிட்டு பார்க்கப்படும். இரண்டு முறை மேற்படி காசோலை எங்கள் வங்கிக்கு வசூலுக்காக வந்தபோது வாடிக்கையாளரின் கையெழுத்து முரணனாக உள்ளது என்றும்,



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.29 12:58:32 +0530

போதுமான பணம் இல்லை என்றும், திருப்பி அனுப்பப்பட்டது. மேற்படி இரண்டு முறையும் காசோலையை வங்கி செலுத்திய வாடிக்கையாளர் கண்ணனுக்கு காசோலை திருப்பப்பட்டதற்கான Return memo கொடுக்கப்பட்டது. நான் எங்களுடைய வாடிக்கையாளர் கண்ணன் உடைய வங்கி கணக்கு பரிவர்த்தனை பதிவேடு தற்போது என் கைவசம் உள்ளது. மேற்படி கண்ணன் எங்கள் வங்கியின் விதிப்படி கணக்கில் குறைந்தபட்சமாக பராமரிக்க வேண்டிய பணத்தை கூட பல ஆண்டுகளாக இன்றுவரை பராமரிக்கவில்லை. மேற்படி கண்ணனின் வங்கி கணக்கில் மைனஸ்சில் பணம் உள்ளது. மேற்கண்ட இரண்டு முறையும் கண்ணன் செலுத்திய காசோலை திருப்பப்ட்டதற்காக அபராத தொகை வங்கிக்கு செலுத்தியுள்ளார்.

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. வங்கியில் காசோலையை செலுத்தும்போது கணக்கில் போதிய பணம் இல்லாமல் இருந்தாலும் சில நேரங்களில் ரிட்டன் மொமோ கொடுப்பதில்லை என்றால் வங்கி வாடிக்கையாளர் தனக்குரிய வங்கி கணக்கில் உள்ள பணத்திற்காக காசோலை செலுத்தி பணம் இல்லாமல் போனால் ரிட்டன் மொமோ கொடுப்பதில்லை, பொதுவாக மூன்றாம் நபருக்குரிய காசோலை செலுத்தி திருப்பப்பட்டால் ரிட்டன் மொமோ கொடுக்கப்படும்.

2. ரிட்டன் மொமோ கொடுக்கும்போது வாடிக்கையாளரிடம் கையொப்பம் வாங்கப்படும் என்றால் பொதுவாக கவுண்டர் மூலம் ரிட்டன் மொமோ கொடுக்கப்படுவதால் கையொப்பம் வாங்கப்படுவதில்லை, அதை பொறுத்து ஆவணங்களும் பராமரிக்கப்படுவதில்லை. வழக்கு காசோலை ஆனது



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.29 12:58:38 +0530

முதல் முறை Over the counter மூலம் கொடுக்கப்பட்டதால் ரிட்டன் மெமோ கொடுக்கப்படாமல் காசோலை திருப்பப்பட்டது என்றால் சரியல்ல.

3. ஒரு நபரின் வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை அல்லது பணம் பராமரிக்கப்படவில்லை என்றால் காசோலையில் உள்ள தொகையை கொடுப்பதற்கு தகுதி அற்றவர் ஆவாரா என்றால் என்னால் கருத்து சொல்ல இயலாது. ஒருவர் வங்கியில் ஒரு கணக்கு மேல் அல்லது பல வங்கியில் கணக்கு பராமரிக்கலாம் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை**

30.10.2021 தேதிக்கு பிறகு எங்கள் வங்கி வாடிக்கையாளரான கண்ணன் வங்கி கணக்கில் பணம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2025.08.29 12:58:44 +0530